நகராட்சி அலுவலகம்,
விக்கிரமசிங்கபுரம்.
நாள் : **06.04.2022**

**சாதரணக் கூட்டம்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மன்றத்தின் சாதாரண கூட்டம் எதிர்வரும் 2022ம் வருடம் **ஏப்ரல்** மாதம் **11ம் தேதி திங்கட் கிழமை** காலை 10.30 மணிக்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற **சாதரணக் கூட்டம்** நடவடிக்கைகள்

**பொருள் எண் : 1**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி மற்றும் காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சொத்துவரி:**

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி மற்றும் காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி மற்றும் காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி **(Current Liabilities)** (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 2.45 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 0.26 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 3.60 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 0.10 |
| | **மொத்தம்** | **6.41** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி மற்றும் காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி மற்றும் காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி மற்றும் காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

**அலுவலககுறிப்பு**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி பொது மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், நகராட்சியின் நிதிநிலையினை உயர்த்தவும், அரசாணை(நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர், நாள்.01.04.2022–ல் தெரிவித்துள்ளவாறு சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொது சீராய்வு செய்து வரி உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 24 / அரசாணை மற்றும் சுற்றரிக்கையில் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின் படி 01.04.2022 முதல் சொத்து வரி மற்றும் காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 31116/2022/அம்ரூட் 2 நாள் 29.03.2022 ல் திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட நகராட்சிகளுக்கு 15 வது மத்திய நிதிக்குழு மான்யம் UNTIED Grant 2021–22 ல் ஒதுக்கீடு செய்த தொகையில் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு 15 வது மத்திய நிதிக்குழு மான்யம் UNTIED Grant 2021–22 ன் கீழ் புதிய LED தெருவிளக்குகள் அமைக்க ரூ. 25.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கடிதம் ந.க.எண் 31116/2022/அம்ரூட் 2 நாள் 29.03.2022 ன் படி 2021–22 ம் வருட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.25.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்து வரப்பெள்ளதினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 25 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 3)**

திருநெல்வேலி மாவட்ட அட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் ஜி2/9907/22 நாள் 26.03.2022 ன்படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு வாகன காப்பகம் மற்றும் பேரூந்து நிலையம் அமைத்துக்கொள்ள முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எதிர்வரும் சித்திரை விசு திருவிழாவினை முன்னிட்டு, அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயனிகளின் கூட்டம் அதிகளவு இருக்கும் என்பதால், அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோவிலுக்கு முன்பு போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயனிகளின் வாகனங்களை மேற்கண்ட வாகனக் காப்பகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏதுவாக மேற்கண்ட இடத்தினை சமன் செய்யது சீர் செய்ய மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களால் 06.04.2022 அன்று மேற்கொள்ளப்பட்ட நேரடி ஆய்வில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி மேற்கண்ட புல எண் 905/4,905/5 மற்றும் 903/2 தோப்பு புறம்போக்கு நிலத்தினை சமன் செய்யும் பொருட்டு , விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் ஜேசிபி இயந்திரம் கொண்டு சமன் செய்யும் பணிகள் மேற்கொள்ளவும் , மற்றும் அய்யனார்குளம் பகுதி கூவாரியில் இருந்து சரள் கொண்டு வந்து இடத்தினை சமன் செய்ய வேண்டியும் பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

எதிர்வரும் சித்திரை விசு திருவிழாவினை முன்னிட்டும், பொது மக்கள் மற்றும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயனிகளின் நலன் கருதியும், பணியின் அவசியம் கருதியும், மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 26 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 4**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் **06.04.2022** அன்று திருநெல்வேலி மண்டல நகராட்சிகள் நிர்வாக இய்குநர் அவர்களின் நேரடி ஆய்வின் போது, எதிர்வரும் சித்திரை விசு திருவிழாவினை முன்னிட்டு, அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயனிகளின் கூட்டம் அதிகளவு இருக்கும் என்பதால் பொது மக்கள் பயன்பாட்டிற்காகவும், பொது சுகாதாரம் மற்றும் திறந்தவெளியில் மலம் கழிப்பதை தடுக்கும் பொருட்டு , அருள்மிகு பாபநாசசுவாமி திருக் கோவில் அருகே BIO Toilet அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி பாபநாசம் கோவில் அருகே 4 எண்ணம் BIO Toilet அமைக்கும் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.,

**அலுவலகக்குறிப்பு**

எதிர்வரும் சித்திரை விசு திருவிழாவினை முன்னிட்டும், பொது மக்கள் மற்றும் பக்தர்கள் நலன் கருதியும், பணியின் அவசியம் கருதியும், மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 27 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 5**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோவிலுக்கு, சித்திரை விசு திருவிழாவினை முன்னிட்டு வரும் பக்தர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் ஆகியோருக்கு போது மான அடிப்படை வசதிகள் செய்தல் தொடர்பாக மன்றத்தின் பரிசீலனைக்கு

**அலுவலகக்குறிப்பு**

பாபநாசம் கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு இந்நகராட்சி மூலம் தற்காலிக அடிப்படை வசதிகளான கழிப்பிடம், குடிநீர் வசதி, தற்காலிக தெருவிளக்கு ஆகியவைகளை ஏற்படுத்தி கொடுக்கவும், நகராட்சி மூலம் அமைக்கப்படும் வாகன நிறுத்தில்., நிறுத்தப்படும் வாகனங்களுக்கு வாகனநிறுத்தக் கட்டணம் நிர்ணயம் செய்து கட்டணம் வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 28 / வாகன நிறுத்தக்கட்டணமாக நான்குசக்கர கார்ஒன்றுக்கு ரூ.20/--, வேண் ஒன்றுக்கு ரூ. 30/-- மற்றும் பேரூந்துகளுக்கு ரூ.50 என வசூல் செய்ய அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 6**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் புதிய வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கும்போது தெருவிலுள்ள சாலைகளை தோண்டும் நேர்வில் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சாலை பராமரிப்பு கட்டண தொகையினை சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 748/08/குவ2 நாள்21.09.2009ல் 5% உயர்த்த அறிவுரை வழங்கி உள்ளார்கள். எனவே ஏற்கனவே உள்ள 2021--22 ம் ஆண்டிற்கான சாலை பராமரிப்பு கட்டண தொகையில் 5% உயர்த்தி 2022--23 ஆம் ஆண்டிற்கு உயர்திட மன்றத்தின் அனுமதிக்கு.

| நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் | கருங்கல் சாலை ரூ | தார்சாலை ரூ | சிமெண்ட்சாலை / பேவர்பிளாக் சாலை ரூ |
|---|---|---|---|
| 0 முதல் 30 மீட்டர் நீளத்திற்கு 2021--22 | 1891 | 4046 | 4675 |
| உயர்த்தப்பட்ட கட்டணம் 2022--23 | 1986 | 4248 | 4909 |
| 30 முதல் 90 மீட்டர் நீளத்திற்கு 2021--22 | 2966 | 5121 | 5744 |
| உயர்த்தப்பட்ட கட்டணம் 2022--23 | 3114 | 5377 | 6031 |

(ந.க.எண்:929/2018/இ1) **தீர்மான எண் : 29 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 7**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு 1 முதல் 21 வார்டு உறுப்பினர்களிட்மிருந்து பெறப்பட்ட மனுக்களின் படி கீழ்க்கண்ட வேலைகளினை முன்னுரிமைப்படியும், பணியின் அவசரம் மற்றும் அவசியத்தின் படியும், திட்ட ஓதுக்கீடு மற்றும் உரிய பொது நிதி திட்ட ஓதுக்கீட்டின் படியும் தேர்வு செய்தல் தொடர்பாக மன்றத்தின் பரிசீலனைக்கு

| வார்டு எண் | வேலையின் பெயர் |
|---|---|
| 1 | முதலியார்பட்டி மெயின்ரோடு கீழ்புறமாக உள்ள ஆழமரத்தின் அருகில் தென்வடலாக எள்ள மழைநீர் ஓடையில் புதிய பாலமும், புதிய மின் விளக்குகள் , சாலை சரி செய்தல் மற்றும் தண்ணீர்குழாய் பதித்தல் |
| 1 | முதலியார்பட்டி மெயின்ரோட்டிற்கு மேல்புறமாக தென்வடலாக செல்லும் மெயின் குடிநீர் குழாயிலிருந்து புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதித்து தர கேட்டல் |
| 1 | முதலியார்பட்டி தெற்குகடைசி தெருவில் பரமகத்தி அம்மன் கோவில் தென்புறம் மற்றும் வடபுறம் கிழமேலாக இரண்டு தெருக்களிலும் புதிய மின் விளக்கு மற்றும் சாலை அமைத்ல் |
| 1 | முதலியார்பட்டி வடக்குத் தெருவில் கழி வு நீர் ஓடை அமைத்தல் |
| 1 | முதலியார்பட்டி ஐயா கோவில் முன் புறம் மற்றும் பிற பகுதிகளில் மின் விளக்குகள் அமைத்தல் |
| 1 | முதலியார்பட்டி மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகே உள்ள சின்டெக்ஸ் டெங் பழுதுகளை சரிசெய்தல் |
| 1 | முதலியார்பட்டி மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து பதிக்கப்பட்டுள்ள குடிநீர் குழாயினை மேலும் மீதமுள்ள பகுதிக்கு விஸ்தீரனம் செய்தல் |
| 1 | கோட்டைவிளைப்பட்டி பகுதியில் பதிக்கப்பட்டுள்ள 2 இஞ்ச் குடிநீர் பகிர்மான குழாயினை மாற்றி 3 இஞ்ச் குடிநீர் குழாய் பதித்து தர கேட்டல் |
| 1 | கோட்டைவிளைப்பட்டியில் உள்ள பொது கழிப்பிடத்தில் புதிய ஆழ்துளை ய் அமைத்து தண்ணீர் வசதி செய்து தர கேட்டல் |
| 1 | கோட்டைவிளைப்பட்டி தென்புறமுள்ள மகாத்மா காலனி பகுதியில் புதிய சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தர கேட்டல் |
| 1 | கொண்டபையன் பட்டி சிஎஸ்ஐ சர்ச் கீழ்புறம் தென்வடலாக புதிய பேவர் பிளாக் சாலை அமைத்து கேட்டல் |
| 1 | கொண்டப்பையன்பட்டி பகுதியில் பதிக்கப்பட்டுள்ள 2 இஞ்ச் குடிநீர் பகிர்மான குழாயினை மாற்றி 3 இஞ்ச் குடிநீர் குழாய் பதித்து தர கேட்டல் |
| 1 | வடமலைசமுத்திரம் முதல் கருத்தப்பிள்ளையூர் ரோட்டில் புதிய மின் கம்பங்கள் அமைத்தும், புதிய தெருவிளக்குகள் அமைத்தும் கேட்டல் |
| 1 | வடமலைசமுத்திரம் ஆர்சி சர்ச்க்கு எதிர்புறம் உள்ள தெருவில் மற்றும் பிற பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைத்து தர கேட்டல் |
| 2 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 2 அய்யனார்குளம் பகுதியில் உள்ளள |

| | |
|---|---|
| | அம்மன்கோவில் கீழ்புறம் சாலையில் பேவர் பிளாக் சாலை அமைத்து கேட்டல் |
| 2 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 2 தேர்ருலையஙட வடபுறம் உள்ள தார்சாலைகளில் வாறுகால் அமைத்து கேட்டல் |
| 2 | தேர் ஓடும் வீதியில் மேல்புறம் தடுப்பு சுவர் அமைத்து தர கேட்டல் |
| 2 | அய்யனார்குளம் பகுதியில் பூங்கா அமைத்து தர கேட்டல் |
| 2 | காந்திநகர் பகுதியில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தர கேட்டல் |
| 2 | அமலி பள்ளி கீழ்புறம் உள்ள தெருவில் சிறுபாலம் மற்றும் சாலை அமைத்து தர கேட்டல் |
| 2 | அய்யனார்குளத்தில் இருந்து அம்பாசமுத்திரம் செல்லும் சாலையில் உள்ள இரயில்வே பாலத்தின் அருகே உள்ள மண்பாதையில் புதிய சாலை அமைத்து தர கேட்டல் |
| 3 | அம்பலவாணபுரம் மெயின்ரோடு வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் இருபுறமும் மழைநீர் வடிகால் அமைத்து தரகேட்டல் |
| 3 | திரு இருதய மேல்நிலைப்பள்ளி அருகில் மின் விளக்கு அமைத்து தர கேட்டல் |
| 3 | இந்தியன் ஒவர்சீஸ் வங்கி அருகில் உள்ள சின்டெக்ஸ் தொட்டி சரி செய்து கேட்டல் |
| 3 | சொசைட்டி தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல், அதே தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தர கேட்டல் |
| 3 | 3 வது வார்டு பகுதியில் புதிய மின் விளக்குகள் மற்றும் எல் இ டி விளக்குகள் அமைத்து தர கேட்டல் |
| 3 | ஜார்ஜ் புரம் பகுதியில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தரவும், போலீஸ் லைன் அருகே உள்ள கிணற்றுக்கு மூடி அமைத்து தர கேட்டல் |
| 4 | கட்டபுளி தெரு மற்றும் சேரிமெயின்ரோட்டில் பழுதடைந்துள்ள குடிநீர் தொட்டிகளை சீர் செய்து தர கேட்டல் |
| 4 | கட்டப்புளி மேட்டுத் தெருவில் பழுதடைந்துள்ள சாலை மற்றும் கழிவு நீர் ஓடை சரி செய்து மூடி அமைத்து தர கேட்டல் |
| 4 | வார்டு 4 ல் உள்ள அனைத்து பகுதிகளிலும் மின் விளக்குகள் சரி செய்வதுடன் புதிய மின் விளக்குகள் அமைத்து தர கேட்டல் |
| 5 | கம்பளத்தார் ஓடை தெரு வடபகுதியில் கழிவு நீர் ஓடை மற்றும் புதிய சிமெண்ட் சாலை அமைத்து தர கேட்டல் |
| 5 | காந்திபுரம் தெரு நகராட்சி துய்மை பணியாளர்கள் வசிக்கு குடியிருப்பில் கழிவு நீர் ஓடை அமைத்து சிமெண்ட் சாலை அமைத்து தர கேட்டல் |
| 5 | இஎஸ்ஐ ஆபீஸ் தெரு கழிவு நீர் ஓடை அமைத்து சிமெண்ட் சாலை அமைத்து தர கேட்டல் |
| 5 | சன்னதி தெரு சந்து பகுதியில் கழிவு நீர் ஓடை அமைத்து தர கேட்டல் |
| 5 | காந்திபுரம் தெரு மற்றும் அண்ணா காலணி பகுதிக்கு புதிய குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்து கேட்டல் |
| 5 | காந்திபுரம் தெருவில் பழுதடைந்துள்ள சின்டெக்ஸ் தொட்டி சீர் செய்து தர கேட்டல் |
| 6 | சலவை தொழிலாளர் காலணி பகுதியில் புதிய சின்டெக்ஸ் தொட்டி அமைத்து கேட்டல் |
| 6 | சலவை தொழிலாளர் காலணி பகுதியில் 4 இஞ்ச் குடிநீர் குழாய் அமைத்து தர கேட்டல் |

| | |
|---|---|
| 6 | மேட்டுத் தங்கம்மன் கோவிர் வாட்டர் டேங் கீழ்புறம் உள்ள மண் சாலையினை சிமெண்ட சாலையாக மாற்றி தர கேட்டல் |
| 7 | 7 வது வார்டு பகுதியில் புதியதாக 30 எண்ணம் தெருவிளக்குகள் அமைத்து தர கேட்டல் |
| 7 | கருத்தையா புரம் பள்ளிவாசல் அருகே உள்ள கழிவுநீர் ஓடையினை செப்பனிட்ட தர கேட்டல் |
| 7 | சங்கரபாண்டியபுரம் பள்ளிவாசல் முதல் சங்கர விநாயகர் கோவில் வரை இருபுறமும் கழிவுநீர் ஓடை அமைத்து தர கேட்டல் |
| 7 | சுந்தரபுரம் தென்வடல் தெருவில் மைய பகுதியில் உள்ள மின் கம்பத்தை இடம் மாற்றி அமைத்து தர கேட்டல் |
| 8 | 8 வது வார்டு அய்யாதோப்பு அருகே, மற்றும் பசுகிடைவிளை ரோடு ஐஸ் கம்பெனி அருகே உள்ள அடிபம்பினை அகற்றி சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தர கேட்டல் |
| 8 | கருத்தையாபுரம் வடக்குவாச் செல்வி அம்மன்கோவில் வடகே உள்ள மண் சாலையில் புதிய சாலை அமைத்து தர கேட்டல் மற்றும் வடக்கு தெரு சுரேஷ் பெட்டி கடை அருகே புதிய சாலை அமைத்து தர கேட்டல் |
| 8 | அய்யாகோவில் தென் பக்கம் மேலத் தெருவில் உள்ள மண் சாலையில் பேவர் பிளாக் சாலை அமைத்து தர கேட்டல் |
| 8 | 8 வது வார்டு கீழத்தெருவில் பாறைகள் மணல் தரையுள்ள பாதையினை மாற்றி புதிய சிமெண்ட் சாலை அமைத்து தர கேட்டல் |
| 8 | கோட்டைவிளைப்பட்டி ரோடு மகத்மா காந்தி காலணி குடியிருப்பில் சிதிலடைந்த சாலைகளை சரிசெய்தும், மின் விளக்குகள் அமைத்து தர கேட்டல் |
| 9 | வடக்கு அகஸ்தியர்புரம் வாட்டர் டேங் எதிர்புறம் உள்ள தெருவில் கழிவு நீர் ஓடை அமைத்துதர கேட்டல் |
| 9 | வடக்கு அகஸ்தியர்புரம் குளத்து தெருவில் கழிவு நீர் ஓடை அமைத்துதர கேட்டல் |
| 9 | தெற்கு அகஸ்தியர்புரம் காளியம்மன் கோவில் முன்புள்ள பழுதடைந்த பாலத்தினை சீர் செய்து தர கேட்டல் |
| 9 | அருணாசலபுறம் மெயின்ரோட்டிலிருந்து கீழத்தெருவிற்கு செல்லும் சாலையில் சிறுபாலம் அமைத்து தரகேட்டல் |
| 10 | டாணா காளியம்மன் கோவில் காளிபார்விளை தெருவில் தார் சாலை அமைத்து தர கேட்டல், பொதிகை நகர் மேற்குப்பகுதியில் தார் சாலை அமைத்து தர கேட்டல், அனவன் குடியிருப்பு அம்மன் கோவில் மேற்குபகுதி மற்றும் அய்யாகோவில் வடபுறம் தார் சாலை அமைத்து தர கேட்டல் |
| 10 | டாணா காளிபார்விளை தெரு, முகில் தெரு, வசந்தம் தெரு, தென்றல் தெரு, பரணி தெருக்களில் வாறுகால் அமைத்தல் |
| 10 | டாணா காளிபார்விளை தெருவில் பாலம் மற்றும் படித்துறை அமைத்தல், |
| 10 | அனவன் குடியிருப்பு பகுதி பொன்னுசாமி அவர்களின் வயலுக்கு கீழ்புறத்தில் படித்துறை அமைத்து தர கேட்டல் |
| 11 | டாணா எரிகல்பாறை வடக்குத் தெரு பகுதியில் சாலை வசதி செய்த தர கேட்டல் |

| | |
|---|---|
| 11 | சிவஞானபுரம் தெற்கு தெரு பகுதியில் உள்ள வாய்கால் பாலத்தினை சீர் செய்து தர கேட்டல் |
| 11 | மேட்டுப்பாளையம் தெற்குத் தெருவில் உள்ள மண்சாலையினை தார் சாலையாக மாற்றி தர கேட்டல் |
| 12 | பொதிகையடி மயானத்திற்கு செல்லும் வழியில் சாலை அமைத்து தர கேட்டல் |
| 12 | வடக்குத் தெருவில் கழிவு நீர் ஒடை அமைத்து தர கேட்டல் |
| 12 | 12 வது வார்டு ஊருக்கு மேற்கே உள்ள படிதுறைகளை சரி செய்து தர கேட்டல் |
| 12 | லோயர் கேம்ப் பகுதியில் வாறுகால் அமைத்து தர கேட்டல் |
| 12 | சமுதாய நலக்கூடம் வடப்புறம் உள்ள தெருவில் புதிய சாலை அமைத்து தர கேட்டல் |
| 12 | வார்டு எண் 12 ல் புதிய மின் விளக்குகள் அமைத்து தர கேட்டல் |
| 13 | புதுமணை தெருவில் கழிவு நீர் ஓடை, உலகாம்பிகை திருமணமண்டபம் கீழ் பக்கம் உள்ள மண் சாலையில் புதிய சாலை மற்றும் வாறுகால்,மருதம் நகரில் கழிவு நீர் ஓடை, டாணா வட்டர் டேங் அருகே உள்ள தெருவில் வாறுகால் ஆகியவை அமைத்து தர கேட்டல் |
| 13 | திருவள்ளுவர் நகர் பகுதியில் உள்ள ஓடை தண்ணீர் மழைகாலத்தில் ஊருக்குள் வருவதை தடுக்கும் பொருட்டு தடுப்பு சுவர் |
| 13 | 13 வது வார்டு பகுதியில் புதிய அங்கன் வாடி, ரேசன் கடை, பூங்கா அமைத்து தர கேட்டல் |
| 14 | கீழக்கொட்டாரம் மையான சாலையினை சீர் அமைத்து தர கேட்டல் |
| 15 | தேவசகாயபுரம் கீழத் தெருவில் பேவர் பிளாக், புதுமனை கீழத் தெரு ஆண்ட்ரூஸ் பள்ளி அருகே பேவர் பிளாக் மற்றும் வாறுகால்,பள்ளிவாசல் தெருவில் பேவர் பிளாக் சாலை, முத்து கிருஷ்ணாபுரம் வடக்கு மற்றம் தெற்கு தெருவில் பேவர் பிளாக்சாலை, அன்பு நகர் பேவர் பிளாக் சாலை, எஸ்ஆர்வி நகர் வாய்கால் ரோடு வடபுறம் தடுப்பு சுவர், மற்றும் புதிய சமுதாய நலக்கூடம் அமைத்து தர கேட்டல் |
| 15 | பள்ளிவாசல் தெற்கு தெருவில், பாலகர் பள்ளி, ரேசன் கடை மற்றும் விக்கிரமசிங்கபுரம் பொது நுலகத்தை பராமரித்தல் |
| 15 | காமாட்சியம்மன் கோவில் பள்ளத் தெருவில் பேவர் பிளாக் சாலை, கழிவுநீர் ஓடை, சின்டெக்ஸ் டேங் அமைத்தல் |
| 15 | மருதையாபுரம் பகுதியில் பேவர் பிளாக் சாலை, கழிவுநீர் ஓடை, சின்டெக்ஸ் டேங் அமைத்தல் |
| 16 | மேற்குமுப்பிடாதியம்மன்கோவில் வடக்குத் தெரு, நடுத்தெரு, தெற்குதெரு பகுதியில் மண்பாதையை மாற்றி சாலை அமைத்து தர கேட்டல் |
| 16 | ரைஸ்மில் சந்த கடைசியில் தெருவிளக்கு அமைத்து தர கேட்டல் |
| 16 | ஓட்டன்குளம் அருகே சின்டெக்ஸ் தொட்டி, கழிவுநீர் வீடுகளுக்குகள் புகுவதை சரி செய்ய வேண்டுதல் மற்றம் நாராயணசாமி கோவில் அருகே மழைநீர் தேங்குவதை சரி செய்ய வேண்டுதல் |
| 17 | வைத்திலிங்கபுரத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைத்து தரகேட்டல் |

| | |
|---|---|
| 17 | வைத்திலிங்கபுரம் மெயின்தெருவில் உள்ள பழுதடைந்த ஓடையினை சீர் செய்த தர கேட்டல் |
| 17 | பணையடியான் கோவில் பின்புறம் உள்ள முடுக்கில் சாலை , கழிவுநீர் ஓடை மற்றும் மின் விளக்குகள் அமைத்து தர கேட்டல் |
| 18 | 18 வது வார்டு இஎஸ்ஐ அபீஸ் தெரு, அம்பாள்அஸ்பத்திரி தெரு, கட்டப்புளி மேலப்பள்ள தெரு, சன்னதி தெரு சந்து, திரேசா மெடிக்கல் கீழ்புறம் உள்ள பழுதடைந்த சாலைகளை சரி செய்ய கேட்டல் |
| 18 | சாலை தெரு முப்பிடாதி அம்மன் கோவில் தெரு பகுதியில் உள்ள ஓடைகளை அகலப்படுத்தி தர கேட்டல் |
| 18 | மீனாட்சிபுரம் தெற்கு கடைசி தெருவில் படித்துரை அமைத்து தர கேட்டல் |
| 18 | அருள்மிகு பாபநாசம் திருகோவில் முன்பு பரிகாரம் செய்யும்நேர்வில் கழிக்கப்படும் பொருட்களை ஆற்றில் வீசுவதோடு ஆங்காங்கே போட்டு செல்கின்றனர், அதனை தவிர்க்கும் பொருட்டு சேனையர் மண்டபம் எதிரில் பெரிய அளவில் படித்துரை அமைக்கவும்,கழிப்பு பொருட்களை ஆற்றில் போடுவதை தடுக்க தனியே இட ஒதுக்கீடு செய்து குப்பை தொட்டி அமைக்கவும், தினமும் நகராட்சி மூலம் அதனை சுத்தம் செய்ய வேண்டியும்கேட்டல் |
| 19 | 19வது வார்டு பன்னிமாடசாமி கோவில் தெருவில் சாலை மற்றும் கழிவு நீர் ஒடை அமைத்து தர கேட்டல் |
| 19 | இராமலிங்கபுரம் வடக்கு தெரு சந்து முடிவில் மற்றும் பூந்தோட்டம் தெருவில் உள்ள கழிவு நீர் கால்வாய் மற்றும் சாலைகளை சரி செய்து தர கேட்டல் |
| 19 | பன்னிமாடசாமி கோவில் தெரு முத்தாட்சியம்மன் கோவில் அருகே மற்றும் வைத்திலிங்கபுரம் நடுத்தெரு சின்டெக்ஸ் பின்புறம் உள்ள கழிவு நீர் ஒடை சீர் செய்து தர கேட்டல் |
| 21 | ஞானியார்தோப்பு அந்தோணியர் கோவில் அருகே உள்ள பாலம் சரி செய்து தர கேட்டல்<br>ஞானியார்தோப்பு கீழ்பகுதி மற்றும் தெற்கு தெருக்களில் உள்ள சிதிலமடைந்த கழிவுநீர் ஓடை சரிசெய்து தர கேட்டல்<br>அம்பலவாணபுரம் மேலத் தெருவில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தர கேட்டல் |

**அலுவலகக்குறிப்பு**

நகராட்சியின் நிதி நிலமை மற்றும் வரும் நிதியாண்டு திட்ட ஓதக்கீட்டின் படியும், பணியின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்திற்கொண்டு, முன்னுரிமைப்படி பணிகளை தேர்வு செய்ய மன்றம் பரிசீலிக்கலாம்.

**தீர்மான எண் : 30 / நகர்மன்ற உறுபினர்களின் கோரிக்கைகள், முன்னுரிமை அடிப்படையில் , நிதிநிலமையினை கருத்திற்கொண்டு, திட்ட நிதி ஒதுக்கீட்டின்படி பணிகளை தேர்வு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 8**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 2022-23 ம் ஆண்டு தேவையான தளவாட சாமன்கள், கிருமி நாசினி, கொசு மருந்து, பீளிச்சிங் பவுடர்,சுன்னாம்பு பவுடர் மற்றும் அத்தியவசிய பொருட்கள் கொள்முதல் செய்யவும்,

அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.10.00 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரம் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 31 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 9**

விக்கிரமசிங்கபுரம் அலுவலக பயன்பாட்டில் உள்ள தொலைபேசி இணைப்புகள் மற்றும், வசூல் மையத்திற்கு உரிய விபின் இணைப்பு ஆகியவைகளுக்கு2022 -23 ம் ஆண்டு தொலைப்பேசி கட்டணங்களை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 32 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 10**

விக்கிரமசிங்கபுரம் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்படும் உள்ளூர் மற்றும் வெளியூர் தபால்களுக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.35000/- த்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 33 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 11**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான பலசரக்கு, காய்கறி, பால், சிலிண்டர், மற்றும் பணியாளர்களின் ஊதியம் மாதம் ஒன்றுக்கு உத்தேசமாக ரூ. 2.30 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருது செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 34 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 12**

2022-23 ம் ஆண்டு விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணிப்புரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர், ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் தையற்கூலி வழங்க ஆகும் செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருது செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 35 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**நகர்மன்றத் தலைவர்**
**விக்கிரமசிங்கபுரம் நகராட்சி**